## 34. உம்மை போல நல்ல தேவன்

### பல்லவி

உம்மை போல நல்ல தேவன் யாரும் இல்ல
உம்மை போல வல்ல தேவன் யாரும் இல்ல

### அனுபல்லவி

*நீர் ஏழைகளுக்கு பெலன் எளியவருக்கு திடன்*
*புயல் காற்றில் சிக்கியவருக்கு புகலிடம் நீரே*

### சரணங்கள்

1. திக்கற்ற பிள்ளைகளின் தகப்பன் நீரே
தேவைகளை அறிந்த நல்ல தந்தை நீரே
ஆதரவு அற்றவருக்கு ஆதரவு நீரே
வழிதெரியத அலைபவருக்கு வழிகாட்டி நீரே
- நீர் ஏழைகளுக்கு

2. வருத்தப்படுகின்ற யாவருக்கும்
இளைப்பாறுதல் தருகின்றவர்
காயத்தோடு வருகின்ற யாவருக்கும்
காயம் கட்டி ஆறுதல் அளிப்பவரே
- நீர் ஏழைகளுக்கு

3. பெரிய காற்றுக்கு அடைக்கலமே
பெரிய வெள்ளத்திற்கு புகலிடமே
வரண்ட நிலத்தின் நீர்காலும் நீர்
பெரிய கன்மலையின் நிழலும் நீர்
- நீர் ஏழைகளுக்கு